## பாடம்-13

### நான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்

மனிதன் கேட்கும் கேள்விகளில் மிக முக்கியமான கேள்வி "நான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்" என்பதே. வேதத்தில் இதற்குரிய பதில் காணப்படுகிறது, இந்த பதிலை கண்டறிந்த மக்களையும், கண்டறிந்த விதத்தையும் "அப்போஸ்தலர் நடபடிகள்" புத்தகத்தில் நாம் காணலாம். இப்பாடம் உங்கள் இரட்சிப்புக்கு மிகவும் முக்கியமானது.

### அனைத்து மக்களும் இரட்சிக்கப்பட வேண்டும்

எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானோம் என்று வேதம் கூறுகிறது. (ரோ 3:23) நாம் பாவமன்னிப்பை பெறாவிட்டால், இயேசு திரும்ப உலகை நியாயம் தீர்க்க வரும்போது நாம் நரக தண்டனை அடைவோம்.

### அனைத்து மக்களும் ஒரே காரியத்தைச் செய்ய வேண்டும்

தேவன் பட்சபாதமுள்ள வரல்ல, எல்லோரையும் ஒரே அளவு கோல் கொண்டுதான் நியாயம் தீர்ப்பார். (அப் 10;34,இயோ 12;48) சபை ஆரம்பிக்கப்பட்ட பின்பு, மனிதர்கள் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டுமென தேவன் கூறியிருக்கிறார் என்பதை நாம் காணுவோமாக.

### வேதத்தில் காணப்படும் மாதிரிகள்

வேதவரலாற்றில் தேவன் நோவாவைப் பேழையைக் கட்டும் படி கூறினார். தன்மகனைப் பலியிடும்படி ஆபிரகாமிடம் கூறினார். யூதர்களை தேவாலயத்தில் ஆராதிக்கும்படி கூறினார். ஐசுவரிய வாலிபனிடம் அவனுடைய சொத்துகளை விற்கும்படி கூறினார். ஆனால் நாம் செய்ய வேண்டியவைகளை புதிய ஏற்பாட்டுப் பிரமாணத்தில் கூறியுள்ளார். கிறிஸ்து பரமேறிச் சென்ற பின்பு இரட்சிக்கப்பட முதல் மாதிரி அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் காணப்படுகிறது. யூதர்கள் பேதுருவைப்பார்த்து, "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?"என்று கேட்டனர். அவர்கட்கு கிடைத்த பதில்தான் நமக்கும் கிடைத்த பதிலாகும். ஏனெனில் தேவன் பட்சபாதமுள்ளவரல்ல. கொடுக்கப்பட்ட பதிலைக் கவனியுங்கள் "மனந்திரும்பி பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்". (அப் 2:38) இந்த மக்கள் ஏற்கனவே இயேசுவை விசுவாசித்திருந்தனர். ஆகையால் அவர்கட்கு மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படி கட்டளையிடப்பட்டது.

இதே காரியங்களைத்தான் தேவன் நமக்கும் கட்டளையாக கொடுக்கிறார். கீழே கொடுக்கப்பட்டிருக்கும் அட்டவணையை நன்கு கவனியுங்கள். அங்கு காணப்படும் மக்களனைவரும் ஒரே மாதியாகத்தான் இரட்சிக்கப்பட்டனர். அவர்கள் அன்று செய்தவைகளையே நாமும் இன்று நமது இரட்சிப்புக்காக செய்ய வேண்டும்.

| | | |
|---|---|---|
| அப | 2:36-38 | மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றனர் |
| அப் | 8:12 | விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றனர் |
| அப் | 8:26-40 | விசுவாசித்து அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றனர் |
| அப் | 10:34-48 | மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றனர் |
| அப் | 16:4-15 | மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றனர் |
| அப் | 16:30-34 | மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றனர் |
| அப் | 18:8 | மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றனர் |
| அப் | 22:6-16 | ஞானஸ்நானம் பெற்றனர் |

தொகுப்பு : விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றனர்.

மேற்கண்ட காரியங்களை எல்லோரும் செய்தபடியால் இரட்சிக்கப்பட்டனர். இரட்சிப்பைப் பற்றி நாம் படிக்கவேண்டிய வேறு சில வசனங்கள். (யோவா 3:16; 5:24; லூக் 13:3; அப் 17:31; மாற்கு 16:16, ரோமர் 10;9;10; 1 பேது 3:21) இரட்சிப்பைப் பற்றி உங்களுக்கு எழும் சந்தேகங்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

## ஞானஸ்நானத்தைப் பற்றி வேதம் போதிப்பவைகள்

ஞானஸ்நானத்திற்கு

| | | |
|---|---|---|
| சரியான மக்கள் | : | விசுவாசிகள், குழந்தைகளல்ல |
| சரியான பொருள் | : | தண்ணீர் |
| சரியான முறை | : | அடக்கம் (தெளித்தலல்ல) ரோ 6: 3-5 |
| சரியான அதிகாரம் | : | இயேசுவின் நாமத்தினால் (அப் 2:38) |
| சரியான நோக்கம் | : | பாவமன்னிப்பிற்கென்று (அப் 2:38) |